## ஆர் இவர் ஆராரோ

ஆர் இவர் ஆராரோ – இந்த
அவனியோர் மாதிடமே
ஆனடை குடிலிடை மோனமாய்
உதித்த இவ்வற்புத பாலகனார்

பாருருவாகுமுன்னே – இருந்த
பரம் பொருள் தாணிவரோ ?
சீருடன் புவி, வான், அவை பொருள்
யாவையுஞ் சிருஷ்டித்த மாவலரோ ?

மேசியா இவர் தானோ ? – நம்மை
மேய்த்திடும் நரர்கோனோ ?
ஆசையாய் மனிதருக்காய் மரிந்திடும் அதி அன்புள்ள மனசானோ ?

தித்திக்குந் தீங்கனியோ – நமது
தேவனின் கண்மணியோ ?
மெத்தவே உலகிருள் நீக்கிடும்
அதிசயமேவிய விண்ணொளியோ ?